கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும், அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்திற்காகவும் கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

**3.** கூட்டிணைக்கப்பட்ட குழு இலாப நோக்கமற்றதோர் நிறுவனமாக தனித்தும் முழுவதும் சமூகத்தினதும் அதன் உறுப்பினர்களின் நன்மைக்காகவும் மாத்திரமே செயற்படுதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழு இலாப நோக்கமற்ற நிறுவனமாக செயற்படுதல்*

**4.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்*

(அ) சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் மற்றும் பௌத்த, கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் மதங்கள் மத்தியில் சமாதானம், நல்லெண்ணம், புரிந்துணர்வை ஏற்படுத்தும் மத மற்றும் கலாசார வேலைத்திட்டங்களைத் திட்டமிடல், நிதி வளங்களை சேகரித்தல், செயற்படுத்தல் மற்றும் கொண்டுநடாத்துதல்;

(ஆ) எதிர்கால பரம்பரையினர்களுக்காக இலங்கையின் சூழலை அழகுபடுத்துதல், அழிந்துபோவதைத் தடுத்தல், சுற்றாடலைப் பாதுகாத்தல் தொடர்பான வேலைத் திட்டத்தை திட்டமிடல், நிதி சேகரித்தல், அதை நடைமுறைப்படுத்திச் செல்லுதல்;

(இ) இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கான சுகாதாரம் மற்றும் போசாக்கினை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிடல், இவ்வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நடாத்திச் செல்லுதல்;

(ஈ) குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு வீடு மற்றும் வீடு கட்டுவதற்கான உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்;

(உ) அங்கவீன சிறார்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்துவதற்கான பொருள்ரீதியான, நிதிரீதியான மற்றும் தொழில் ரீதியான உதவிகளை வழங்குதல்;

(ஊ) தீடீர் அனர்த்தங்களின்போது விபத்துக்குள்ளான மக்களுக்கு அனுசரணை வழங்குதல் மற்றும் உபகாரங்கள் செய்தல்;

(எ) இளைஞர், யுவதிகளுக்கான தொழில்ரீதியான வழகாட்டுதல்களை மேற்கொள்ளல் மற்றும் விளையாட்டுத்துறையில் பங்களிப்புக்கள் செய்தல்;

(ஏ) அனைத்து மதத்தினர்களுக்குமிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதை நோக்காகக்கொண்ட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

(ஐ) வனவளத் திட்டங்களை மேற்கொள்வதன்மூலம் சுற்றாடல் முகாமை மற்றும் சுற்றாடல் அழிவை குறைப்பதற்காக பங்களிப்புச் செய்தல்;

(ஒ) பிரதேசத்தில் உள்ள புராதன நிலையங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றை எதிர்கால சந்ததிகளுக்காகப் பேணிப்பாதுகாக்கும் நோக்காகக் கொண்ட வேலைத் திட்டங்களுக்கான அனுசரணை பங்களிப்புகளைச் செய்தல்;

(ஓ) பெருந்தோட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள பல்வேறு இனத்தவர்களுக்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் தலையிடுதல்;

(ஔ) விவசாயிகளின் வேலாண்மை நடவடிக்கைகளை மேம் படுத்தல், விவசாயிகளின் சமூக நலனோம்புகை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நவீன அறிவைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களது சிறார்களின் நலனோம்புகை விடயங்களில் பங்களிப்புச் செய்தல்;

(க) மக்களின் பாரம்பரிய சிந்தனைப்போக்கு, உள்நாட்டு மருத்துவம், கலை, கலாசார நடவடிக்கைகள், கைப்பணி உற்பத்திகள் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் உலகளாவிய தொடர்புகளுக்கு அவசியமான அறிவு, வழிகாட்டல்களுக்கு நேரடியாக தலையிடுதல்;

(ங) பொது மன்றும் கூட்டு பிணக்குகளின்போது அவற்றின் சாதாரணத் தன்மையின் மீது நீதி அனுசரணை வழங்குதல் மற்றும் சட்ட உதவிகளைப் பெற்றுக்கொடுத் தல்;

(ச) நகர மற்றும் கிராமிய அலங்கார நடவடிக்கையோடு தொடர்புள்ள வாழ்வாதாரத்துறையில் ஈடுபட்டுள்ளவர் களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்;

(ஞ) தேசிய விழாக்களின்போது பங்களிப்புச் செய்ய அவசிய மானது எனக் கொள்ளப்படும் விழாக்களுக்கு அனுசரணை வழங்கல்;

(ட) மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வழிகாட்டல்களை மேற்கொள்ளல்; மற்றும்

